ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2220/40 - 2021 මාර්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2021.03.23

*2220/40 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல்

திருத்தப்பட்டவாறான, (52 ஆம் அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 22 ஆம் பிரிவின் கீழ், நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதிய, 2179/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக 04/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலாக வெளியிடப்பட்ட பின்வரும் கட்டளை, 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, மாச்சு 23.

## I ஆம் அட்டவணை

| I ஆம் நிரல்<br>பண்டங்கள் | | II ஆம் நிரல்<br>மாதம் ஒன்றிற்கு உள்நாட்டில் வழங்கல் செய்யப்படும்/ இறக்குமதி செய்யப்படும் அளவு (லீற்றர்களில்) | III ஆம் நிரல்<br>தீர்வை விகிதம் (தொகை லீற்றர் ஒன்றிற்கு) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாட்டில் வழங்கப்பட்ட | இறக்குமதி செய்யப்பட்ட |
| 1. | அரச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் மற்றும் அரச திணைக்களங் களில் பயன்படுத்தப்படும் ஈதைல் மதுசாரம் | 10,000 லீற்றர் வரை | விலக்களிப்பு | விலக்களிப்பு |
| | | சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக 20,000 லீற்றர் வரை | | |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | | ரூ. 700 |
| | | 20,000 லீற்றருக்கு மேற்பட்ட | | ரூ. 1,100 |
| 2. | இறுதி உற்பத்தி மது வரி அறவீட்டுக்கு உட்படாத, ஔடத மற்றும் தொழில் துறை உற்பத்திகளுக்காகப் பயன்படுத் தப்படும் ஈதைல் மதுசாரம் (இவ் அட்டவணையின் 3 (அ) மற்றும் 3 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார பொருட்களுக்காகப் பயன்படுத்தும் ஈதைல் மதுசாரம் நீங்கலாக) | 500 லீற்றர் வரை | விலக்களிப்பு | ரூ. 200 |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | ரூ. 100/- | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை | ரூ. 150/- | ரூ. 800 |
| | | 20,000 லீற்றருக்கு மேற்பட்ட | ரூ. 200/- | ரூ. 1,200 |
| 3. | உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தும் ஈதைல் மதுசாரம் - | | | |
| | (அ) உள்நாட்டில் விற்பனைக்கான தொற்று நீக்கிகள் 2020.03.30 ஆந் திகதி முதல் 2020.08.15 ஆந் திகதி வரை | 500 லீற்றர் வரை | விலக்களிப்பு | ரூ. 200 |
| | | 501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை | விலக்களிப்பு | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 வரை | விலக்களிப்பு | ரூ. 800 |
| | | 20,001 லீற்றர் முதல் 100,000 லீற்றர் வரை | விலக்களிப்பு | ரூ. 1,200 |
| | | 100,000 லீற்றருக்கு மேற்பட்ட | ரூ. 100/- | ரூ. 1,200 |
| | (ஆ) ஏற்றுமதிக்கான சுகாதார உற் பத்திகள் | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூ. 25/- | ரூ. 25 |
| 4. | இறுதி உற்பத்தி மது வரி அறவீட் டுக்கு உட்படாத, ஏற்றுமதி செய லாக்க உற்பத்திகளுக்காக பயன் படுத்தும் பொருட்கள் மற்றும் ஏற்றுமதி உற்பத்திகளுக்காக அல்லது இயந்திரசாதனங்களைக் கழுவுவதற்காகப் பயன்படுத்தும் ஈதைல் மதுசாரம் | 500 லீற்றர் வரை | விலக்களிப்பு | விலக்களிப்பு |
| | | 5001 லீற்றர் முதல் 10,000 வரை | ரூ. 100 | ரூ. 700 |
| | | 10,001 லீற்றர் முதல் 20,000 வரை | ரூ. 150 | ரூ. 800 |
| | | 20,000 லீற்றருக்கு மேற்பட்ட | ரூ. 200 | ரூ. 1,200 |

I **அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* *பண்டங்கள்* | | *II ஆம் நிரல்* *மாதம் ஒன்றிற்கு உள்நாட்டில் வழங்கல் செய்யப்படும்/ இறக்குமதி செய்யப்படும் அளவு (லீற்றர்களில்)* | *III ஆம் நிரல்* *தீர்வை விகிதம் (தொகை லீற்றர் ஒன்றிற்கு)* | |
|---|---|---|---|---|
| | | | *உள்நாட்டில் வழங்கப்பட்ட* | *இறக்குமதி செய்யப்பட்ட* |
| 5. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் மதுசார ஸ்பிரிட் (தொழில்துறை ஸ்பிரிட்/ செறிவற்ற ஸ்பிரிட்கள்) | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூ. 75 | ரூ. 1,100 |
| 6. | மதுபானங்கள் (மதுசாரம்) உற்பத்திக்காகப் பயன்படுத்தும் ஈதைல் மதுசாரம் | ஒவ்வொரு லீற்றருக்கும் | ரூ. 10 | ரூ. 10 |

04-534

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.